Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI

| | |
|---|---|
| Case Number | **STC.No.284/2020** |
| Deposition of | PW- 1 |
| Name | : **உமா** |
| Father's Name/Husband Name | : குமார் |
| Village | : புதுஒட்டுப்பட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிப்பட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **02.06.2026**

**எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**PW1 – குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எதிரியை கடந்த 15 வருடமாக எனக்கு தெரியும்.

நான் எதிரியின் அவரச தேவைக்காக அடிக்கடி 10 ஆயிரம், 20 ஆயிரம் கடன் கொடுப்பேன். மேற்கண்ட விவரம் எனது கணவருக்கு தெரியும்.

நான் எதிரிக்கு அடிக்கடி கடன் கொடுக்கும் விவரத்தை எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் கூறிவில்லை என்றால் சரிதான்.

எதிரிக்கு கடன் கொடுத்த தேதியிலேயே எதிரி எனக்கு வழக்கு காசோலையை வழங்கினாரா என்றால் ஆம்.

எதிரி என்னிடம் காசோலையை கொடுக்கும்போது எனது கணவர் என்னுடன் இருந்தார்.

எதிரி என்னிடம் காசோலைய கொடுக்கும்போது எனது கணவர் என்னுடன் இருந்தார் என்ற விவரத்தை எனது பிராதிலும் முதல் விசாரணையிலும் கூறிவில்லை என்றால் சரியல்ல, எனது முதல் விசாரணையில் கூறியுள்ளேன்.

நான் இந்த வழக்கின் எதிரியை தவிர வேறுயாருக்கும் கடன் கொடுத்ததில்லை.

நான் 10 வட்டிக்கு கடன் கொடுப்பேன் என்றால் சரியல்ல.

எனக்கு வட்டிக்குவிடும் தொழில் உள்ளது என்றால் சரியல்ல.

இதே நீதிமன்றத்தில் மற்றொரு நபருக்கு கடன் கொடுத்து அந்த வழக்கும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

எதிரி SBI வங்கியின் காசோலையை வழங்கினார்.

எனது கணவர் சுங்கரஅள்ளியில் அரசு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலை செய்தார் என்றால் சரிதான். 2023 ம் ஆண்டிலிருந்து இன்று வரை அங்கு தான் வேலை செய்கிறார்.

எனது கணவர் சுங்கரஅள்ளியில் பள்ளியில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது எதிரி ரூ.2 லட்சம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

எதிரி நான் சொல்வதுபோல் 6 லட்சத்தி 20 ஆயிரம் கடன் பெறவில்லை என்றாலும், எதிரி 2 லட்சம் ரூபாய் தான் கடன் பெற்று அதை திருப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர், பாப்பிரெட்டிபட்டி**